# வேதாகம இயல்

**முகவுரை:** பரிசுத்த வேதாகமத்தை குறித்ததான படிப்பே வேதாகம இயல் ஆகும்.

A. **ஆதி எழுத்துக்கள்:** வேதாகமத்தின் முதல் 5 புத்தகங்களை மோசே எழுதினார் ஆனால் அவர் எழுதுவதற்கு முன்பாக இந்த பூமியிலே எழுத்துக்கள் இருந்தது என்பதற்கு சான்றுகள் இருக்கின்றன.

1. ஆப்பு எழுத்துக்கள்: எகிப்திய நாகரீகத்தில் ஏறக்குறைய கிமு 3000 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒருவர் மற்றொருவருடன் பேசுவதற்கு 'சித்திர வடிவ எழுத்துகளை' பயன்படுத்தினார்கள். இந்த சித்திர வடிவ எழுத்துக்கள் எகிப்திய கோவில்கள், கட்டடங்கள் மற்றும் கல்லறைகளில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.
2. களிமண் சுவடுகள்: வேதாகமத்தின் அடிப்படையில் ஆபிரகாம் வாழ்ந்ததான மெசபடோமியா என்கின்ற இடத்தில் ஏறக்குறைய கிமு 3000 ஆண்டுகளுக்கு முன்பாக அனேக களிமண் சுவடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் எழுத்துக்கள் காணப்படுகின்றன.
3. எழுத்துக்களின் கண்டுபிடிப்பு: கி.மு. 1750 ல் சிரிய பாலஸ்தீன பகுதிகளில் வாழ்ந்த எபிரெய மக்கள் எழுத்துக்களை கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கு ஆதாரமாக கிமு 1500ல் சீனாய் மலை அமைந்துள்ள பகுதியில் இருந்து 50 மைல் தூரம் உள்ள ஒரு இடத்தில் 'ப்ரோட்டோசீனாய்டிக்' என்ற எழுத்து பொறிப்புகள் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இதிலும் கூட எழுத்துக்கள் இருந்ததற்கான சான்றுகள் நமக்கு கிடைக்கின்றது.

சிலர் மோசே வேதாகமத்தை எழுதுவதற்கு முன்பாக எழுத்துக்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள் ஆனால் மேலே குறிப்பிட்டு இருக்கின்ற இந்தச் குறிப்புகள் எழுத்துக்கள் இருந்தன என்பதற்கு ஒரு சான்றாக இருக்கிறது.

B. **எழுத்து பொருட்கள்:**

1. **கல்** (யாத் 31:18) – சீனாய்மலையில் அவர் (கர்த்தர்) மோசேயோடே பேசி முடிந்தபின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார். ஆக மோசேயின் நாட்களில் கற்கள் எழுத்து பொருட்களாக பயன்படுத்தப்பட்டன (யாத் 34 மற்றும் உபாகமம் 10ம் அதிகாரங்கள்). ...நீ பெரியகல்லுகளை நாட்டி, அவைகளுக்குச் சாந்து பூசி, உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உனக்குக் கொடுக்கும் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குள் பிரவேசிக்கும்படி நீ கடந்துபோனபின்பு, இந்த நியாயப்பிரமாண வார்த்தைகள் யாவையும் அவைகளில் எழுதக்கடவாய் (உபா 27:2,3). இதை யோசுவா 4ம் அதிகாரத்தில் காணமுடியும்.

**புறச் சான்றுகள்:**

a. கிமு 700 ல் காணப்படும் 'சீலோவோம்' எழுத்துப் பொறிப்புகள். எசேக்கியா ஒரு குளத்தையும் சாலகத்தையும் உண்டாக்கினதினாலே தண்ணீரை எருசலேமுக்கு தண்ணீரைக் கொண்டு வந்தார் (2 இராஜா 20:20; 2 நாளா 32:30). இதை எசேக்கியா ஆங்கில எழுத்தான 'S' என்கின்ற வடிவத்திலே அமைத்துள்ளார்.

b. மோவாபிய கல்லின் எழுத்துப் பொறிப்பு: கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் மோவாபின் ராஜாவாகிய மேசா இஸ்ரவேலுக்கு விரோதமாக படையெடுத்து வந்தான் (2 இராஜா 3:4–27). இந்த சம்பவமானது மோவாபியர்களின் எழுத்து பொறுப்புகளில் காணப்படுகிறது.

2. **களிமண்:** இந்தக் களிமண்ணில் கூர்மையான கருவிகளைக்கொண்டு எழுதினார்கள். இது சூரிய வெளிச்சத்தில் காய வைக்கப்பட்டு பின்பு நிரந்தரமாக பயன்படுத்தப்பட்டது. இது

மலிவானதாகவும் அநேக வருஷங்கள் நீடிக்ககூடியதாகவும் இருந்தது. இதை பல பாத்திரங்களில் பத்திரப்படுத்திவைத்தார்கள். அதில் ஒன்றுதான் மண்பாண்டம் (எரேமியா 32:14; எசே 4:1).

**புறச் சான்றுகள்:**

a. சீரிய நாட்டில் 'எப்லா' என்ற இடத்தில் உள்ள நூலகத்தில் 16,000 களிமண் எழுத்துக்கள் கொண்ட சுவடுகள் அங்கே காணப்படுகின்றன. இது ஏறக்குறைய கிமு 2400 க்கு செல்லுகிறது. அந்நாட்களில் 'எப்லேயர்கள்' களிமண் சுவற்றின் மேல் இந்த எழுத்துக்களை எழுதினார்கள் என்பதை தொல்பொருள் ஆராய்ச்சி நமக்கு தெரிவிக்கிறது.

b. எகிப்து நாட்டில் இருக்கக்கூடிய 'டெல் எல் அமர்னா' என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட களிமண் சுவடுகள். இவைகளில் உள்ள விஷயங்கள் கிமு 1350 க்கும் செல்லுகிறது.

c. கிமு 722ல் 'சார்போன் II' என்கின்ற அசீரிய ராஜா சமாரியாவை பிடித்த விஷயங்கள் களிமண் சுவற்றில் எழுதப்பட்டிருக்கிறது.

d. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கட்டிட பணிகள் அநேகம் களிமண் சுவடுகளில் எழுதப்பட்டிருக்கிறது.

3. <u>மரம் மற்றும் மெழுகு</u>

நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுவினிடத்தில், ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோலை வாங்கி, அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதுவாயாக. லேவியினுடைய கோலின்மேல் ஆரோனின் பேரை எழுதக்கடவாய்; அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு வம்சத்தலைவனுக்காகவும் ஒவ்வொரு கோல் இருக்கவேண்டும் (எண் 17:2,3)

மனுபுத்திரனே, நீ ஒரு கோலை எடுத்து, அதிலே யூதாவுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் புத்திரருக்கும் அடுத்தது என்று எழுதி; பின்பு வேறொரு கோலை எடுத்து, அதிலே எப்பிராயீமுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் அடுத்த யோசேப்பின் கோலென்று எழுதி (எசே 37:16)

கிரேக்கர்களுடைய காலத்திலும் ரோமர்களுடைய காலத்திலும் வெள்ளைநிற பலகைகள் எழுதுவதற்காக பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்து சிலுவையில் மரித்த போதும்கூட ரோமர்கள் அவருடைய தலையின் மேல் இந்த வெள்ளை நிற பலகையை பயன்படுத்திதான் எழுதியிருக்கிறார்கள்.

இவர்கள் மரத்தை வெட்டி அதை தேய்த்து அதன் மேல் மெழுகை பூசி அதில் எழுதுவதற்கு பயன்படுத்தக்கூடிய கருவிகளை கொண்டு எழுதினார்கள். குறிப்பாக அவ்வப்போது இந்த எழுத்தாணிகளில் உலோகம் பயன்படுத்தப்பட்டது. (ஏசாயா 30:8 – ஒரு பலகையில் எழுதி: ஆபகூக் 2:2 – பலகைகளிலே தீர்க்கமாக வரை)

4. **<u>உலோகம்:</u>** பசும்பொன்னினால் ஒரு பட்டத்தைப் பண்ணி கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று அதிலே முத்திரை வெட்டாகவெட்டி... (யாத் 28:36).

பொதுவாக வேதாகம நாட்களில் ஆப்பு வடிவ எழுத்துக்களை தங்கம், வெள்ளி, செம்பு மற்றும் வெண்கல தகடுகளை எழுதுவதற்காக பயன்படுத்தினார்கள். கிரேக்கர்கள் மற்றும் ரோமர்கள் அதிகமாக வெண்கல தகடுகளை பயன்படுத்தினார்கள். ஒரு ரோம போர் சீவகன்

பணி நிறைவு செய்யும் பொழுது அவனுக்கு ரோம குடியுரிமை நினைவாகவும், விசேஷித்த சிலாக்கியத்திற்காகவும் ஒரு சிறிய வெண்கல தகடை பரிசாக கொடுத்து அனுப்புவார்கள்.

**புறச் சான்றுகள்:**

கிமு ஆறாம் நூற்றாண்டை சேர்ந்த பழமை வாய்ந்த எபிரேய எழுத்துப் பொறிப்புகள் உலோகத்தின் மீது எழுதப்பட்டிருக்கிறது.

5. **<u>ஓடுகள்:</u>**

உடைந்து காணப்பட்ட மண்பாண்டங்களை பண்படுத்தி அதை ஓடுகளாக மாற்றி அதில் எழுதியிருக்கிறார்கள் என்று பண்டிதர்கள் கூறுகிறார்கள். இது மிகவும் விலை குறைந்ததாக காணப்பட்டது. எளிதில் கிடைக்கக்கூடியதும்; விரைவில் அழியகூடாததுமாக இருந்தது.

**புறச் சான்றுகள்:**

a. கிமு 3100 ல் வாழ்ந்த எகிப்து நாட்டின் முதல் பார்வோன் மன்னனின் பெயர் 'நார்மர்'. அவர் பெயர் பதிந்திருக்கிறார் இரண்டு ஓடுகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்திருக்கிறார்கள்.
b. கிமு எட்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த இஸ்ரவேல் ராஜாவினுடைய பெயர் 'பெக்கா'. இவருடைய பெயர் பதிந்திருந்த ஓடுகளை பாலஸ்தீனத்தில் இருந்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்திருக்கிறார்கள்.
c. கிமு 1100 ல் கண்டெடுக்கப்பட்ட ஒரு ஓட்டில் எபிரெயர்களுடைய 22 எழுத்துக்கள் கண்டெடுக்கப்பட்டது
d. கிமு எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இஸ்ரவேலின் ராஜா 'யெரோபெயாம் II'. இவருடைய அரண்மனைக்கு வெளியிலிருந்து அனேக பொருள்களை கொண்டு வந்தார்கள். அதின் பெயர்களை அந்த ஓட்டில் எழுதி வைத்திருக்கிறார்கள் இதற்கு 'சமாரிய ஓடு' என்று அழைக்கப்படுகிறது.
e. புதிய ஏற்பாட்டிலும்கூட ஓடுகளை எழுதுவதற்காக பயன்படுத்தியிருக்கிறார்கள். ஏறக்குறைய 25 ஓடுகளைக் கண்டுபிடித்திருப்பதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

6. **<u>பாப்பிரஸ்:</u>**

இது நாணல் செடியோடு சம்பந்தப்பட்ட வார்த்தையாக இருக்கிறது. இது ஒரு பழமை வாய்ந்த முக்கியமான எழுத்து பொருளாகும். எகிப்து மற்றும் சீரிய தேசங்களில் ஆழமில்லாத ஏரிகளில் நதிகளில் இந்த நாணலானது வளர்ந்தது. நாணல்கள் பறிக்கப்பட்டு நீளமாக துண்டு துண்டாக வெட்டப்பட்டு அடிக்கப்பட்டு வலது கோணத்தில் வைக்கப்பட்டு அழுத்தப்படும். பிறகு இதை காயவைத்து அதனுடைய வெள்ளை மேற்பரப்பை ஒரு கல்லோடு சேர்த்து மென்மையாக பளபளப்பாக்குவார்கள். இதன் மேற்பரப்பில் தான் எழுத்துக்கள் எழுதப்படும். எகிப்தியர்கள் கிமு 3000லிருந்து 'பாப்பிரஸ்' யை எழுத்து பொருளாக பயன்படுத்தியிருக்கிறார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில்கூட அநேக சான்றுகள் இருக்கிறது.

- சேறில்லாமல் நாணல் ஓங்கி வளருமோ? தண்ணீரில்லாமல் கோரைப்புல் முளைக்குமோ? (யோபு 8:11)
- மோசே சிறுபிள்ளையாக இருக்கும்போது நாணல் பெட்டியில் வைத்து எகிப்திய நைல் நதியில் வைத்ததை வாசிக்கமுடியும் (யாத் 2:3–5).
- நாணல் படவுகளிலே ஸ்தானாபதிகளை அனுப்புகிறதுமான தேசத்துக்கு ஐயோ! (ஏசாயா 18:2)

- காகிதத்தினாலும் மையினாலும் அவைகளை எழுத எனக்கு மனதில்லை (2 யோவான் 12) இந்த காகிதம்கூட 'பாப்பிரசோடு' சம்பந்தப்பட்ட வார்த்தையாக இருக்கிறது. இந்த வசனத்தை அடிப்படையாக நாம் சிந்திக்கும்பொழுது புதிய ஏற்பாட்டின் அநேக பகுதிகள் முதலாவது 'பாப்பிரஸ்' என்ற எழுத்து பொருளை பயன்படுத்தி எழுதினார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

பண்டைய நாட்களில் சீரிய நாட்டின் ஒரு துறைமுகத்தின் பெயர் 'பிப்லோஸ்'. இந்த 'பிப்லோஸ்' என்னும் துறைமுகத்தில் இருந்து அநேக நாணல் கப்பல்கள் போக்குவரத்தில் இருந்தது. இந்தப் 'பிப்லோஸ்' என்னும் கிரேக்க பெயரிலிருந்துதான் புத்தகங்கள் வந்தது. 'பாப்பிரஸ்' என்னும் கிரேக்க பெயரிலிருந்து 'பேப்பர்' என்னும் ஆங்கில சொல் வந்தது. பழமைவாய்ந்த பாப்பிரஸ் துண்டுகள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மூலமாய் கிமு 2400 கண்டெடுக்கப்பட்டது. இந்த பாப்பிரஸ் எழுதுபொருட்கள் உலர்ந்த மற்றும் வறண்ட இடங்களில் மட்டுமே பாதுகாக்கப்பட்டது. ஒரு உதாரணத்துக்கு 'கும்ரான்' என்னும் இடத்தில் இருக்கக் கூடிய குகைகள் மற்றும் எகிப்து நாட்டின் வனாந்திர மணல்களிலெல்லாம் வைத்துப் பாதுகாத்தார்கள். கிபி 3 ஆம் நூற்றாண்டு வரை இந்த பாப்பிரஸ் எழுத்து பொருள் உபயோகத்தில் இருந்தது.

7. **<u>காகித தோல் (பார்ச்மென்ட்):</u>**

ஆடு, வெள்ளாடு, மான் போன்ற மிருகங்களுடைய தோல்களை சவரம் செய்து அவைகளை உரித்து அவைகளை வெயிலில் காயவைத்து அவைகளைப் பண்படுத்தி அதின்மேல் எழுத்துக்களை எழுதினார்கள். இதுதான் காகிதத்தோல் தயாரிப்பாக இருந்தது. இது நெடுங்காலம் நிலைத்து நீடிக்கக்கூடியதாயிருந்தது. நாம் இதற்கு முன் பார்த்த எழுத்து பொருளாகிய 'பாப்பிரஸ்'–யை விட அதிக காலம் நீடித்து நிற்கக்கூடியதாக இருக்கிறது.

'பெர்கமு' என்கிற நகரத்தை குறித்து வெளிப்படுத்தல் இரண்டாம் அதிகாரத்தில் பார்க்கிறோம். அந்த 'பெர்கமு' என்கிற நகரின் பெயரிலிருந்துதான் இந்த ஆங்கிலச் சொல் 'பார்ச்மெண்ட்' வந்தது. அதிகமான காகிததோல்கள் இந்த நகரத்தில் தயாரிக்கப்பட்டது என்பதை சரித்திரம் கூறுகிறது. அதிலும் குறிப்பாக 'பெர்கமு' ராஜாவாகிய 'இரண்டாம் யுமினஸ்' என்பவர் அதிகமாய் இந்த காகிததோல்களை பயன்படுத்தி எழுத்துக்களைக் கொண்டுவந்தார் என்று சரித்திரம் கூறுகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் தீமோத்தேயுக்கு பவுலின் எழுதும்போது துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்துவந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக்கொண்டுவா என்று அவர் சொல்கிறார் (2 தீமோ 4:13). இங்கே தோல்சுருள்கள் என்பதை பார்க்கிறோமே இந்த தோல் சுருளானது நிச்சயமாக பழைய ஏற்பாட்டின் பகுதிகள் எழுதப்பட்ட தோல்சுருள்களாகதான் இருக்கக்கூடும். அப்படி என்றால் பழைய ஏற்பாட்டில் பல பகுதிகளும் கூட இந்த மிருகங்களுடைய தோல்களை பயன்படுத்தி எழுதினார்கள் என்பது நமக்கு இதிலிருந்து நிரூபணமாகிறது.

புறசான்றுகளிலும் கூட கிமு 2500 லிருந்து எகிப்தியர்கள் இந்த மிருகங்களுடைய தோல்களை எழுத்து பொருளாக பயன்படுத்தினார்கள் என்பதற்கு சான்றுகள் இருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சவக்கடல் அருகே அநேக காகிதங்களை கண்டித்திருக்கிறார்கள். யூதர்கள் தங்களுடைய பாரம்பரிய சட்டங்களை ஒரு புத்தகத்தில் எழுதி அதை 'தால்முத்' என்று அழைப்பது உண்டு. அந்த 'தால்முத்' படிக்கும்போதும்கூட யூதர்களுடைய நியாயப்பிரமாணம் அதாவது முதல் ஐந்து புத்தகங்கள் மிருகதோள்களில் எழுதப்படவேண்டும்

என்று குறிப்பிடுகிறது. இந்த சான்றுகள் எல்லாம் 'பார்ச்மெண்ட்' அதாவது 'காகித தோல்' எழுது பொருளாய் பயன்படுத்தப்பட்டது என்பதை நமக்கு நிருபனம்செய்கிறது.

8. <u>தோல் உரைகள்</u>

இந்த எழுது பொருளோடு நெருங்கிய நிலையில் காணப்படும் மற்றொரு எழுது பொருள் 'தோல் உரைகள்' ஆகும். அது குறிப்பாக கன்றுக்குட்டியின் தோலில் இருந்து எடுக்கப்பட்டு அதன் மேல் ஊதா சாயத்தை அடித்து அதன் மேல் எழுத்துக்கள் எழுதப்பட்டது. இந்த தோல் உரைகள் பயன்படுத்தி எழுதப்பட்ட பழமை வாய்ந்த தோல் சுருள் கிமு 1500யை சேர்ந்ததாக இருக்கிறது. அதை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்திருக்கிறார்கள். இரண்டும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய சம்பந்தம் உடையதாக இருக்கிறது பார்ச்மெண்ட் அதாவது காகிததோல் மற்றும் தோல் உரைகள் இவை இரண்டுமே எழுத்து பொருட்களாய் வேதாகம நாட்களில் பயன்படுத்தப்பட்டது.

## C. பழங்கால புத்தகங்களின் வடிவங்கள்

1. <u>சுருள்கள்</u>

இதை காகித சுருள்கள் என்று சொல்லலாம். பாப்பிரஸ் தகடுகளை ஒன்றாகச் சேர்த்து அவைகளில் பசை பூசி ஒரு குச்சியோடு சுற்றி முறுக்கிவிடுவார்கள். இதன் ஒரு பக்கம் மட்டுமே ஆரம்பத்தில் எழுதப்பட்டது பிறகு இரு பக்கங்களிலும் எழுதப்பட்டது. வெளிப்படுத்தல் 5:1ல் இதை 'புத்தகம்' என்றே சொல்லப்பட்டிருக்கிறது. வரலாற்றினைப் பார்க்கும்போது சில சுருள்கள் 144 அடி நீளம் வரை செல்லக்கூடியதாக இருந்தது. ஆனால் சராசரியாக இந்த சுருள்கள் 20–35 அடிகள் வரையும் செல்லும்.

உதாரணத்துக்கு புதிய ஏற்பாட்டில் பெரிய புத்தகங்களாக காணப்படும் மத்தேயு, லூக்கா, அப்போஸ்தல நடபடிகள் புத்தகங்களின் சுருளானது 30–35 அடிகள் வரைக்கும் சென்றது. இது பயன்படுத்துவதற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அந்த சுருளை எடுக்கவேண்டும் என்றால் ஒரு கையில் குச்சியை பிடித்து கொள்ளவேண்டும் மற்றொரு கையில் இந்த சுருளை திறந்து ஒரு பக்கம் வாசிக்கவேண்டும்; வாசித்து முடித்த உடனே குச்சியை பிடித்துக் கொண்டிருக்கிற கையிலே அதை சுருட்ட வேண்டும். இது நடைமுறைக்கு மிகவும் சிரமமாக இருந்தது. ஜனங்கள் இதை விட எளிதான புத்தக வடிவத்தை எதிர்பார்த்தார்கள்.

2. <u>பழங்கால வேத நூல்களின் கையெழுத்துச் சுவடி (codex)</u>

இந்த பாப்பிரஸ் தகடுகள் ஒரு இலை வடிவத்தில் ஆக்கப்பட்டு இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டது. இப்படி பல பாப்பிரஸ் தகடுகளை ஒன்றாக சேர்த்து வைத்து (நோட் புக் உருவாக்குவதுபோல) தைத்து புத்தக வடிவத்திற்கு கொண்டுவரப்படும். ஆரம்பத்தில் பாப்பிரஸ் தகடுகளை வைத்து இப்படி செய்தார்கள்; அதன்பிறகு மிருகங்களுடைய தோல்களிலிருந்து உருவாக்கப்பட்ட காகித தோல்களைகூட இதற்கு பயன்படுத்தி புத்தக வடிவில் கொண்டு வந்தார்கள் இது உபயோகப்படுத்துவதற்கும், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லவும், பிரித்து படிப்பதற்கும் மிகவும் எளிதாக இருந்தது. கிபி முதல் நூற்றாண்டில் இது நடைமுறைக்கு வந்தது.

## D. எழுத்து கருவிகள்

1. <u>உளி (chisel):</u> கற்களின் மீது எழுத்துக்களாக பொறிப்பதற்கு இந்த உளியை பயன்படுத்தி இருக்கிறார்கள்.

2. **உலோகங்கள்:** உலோகத்தை ஒரு முக்கோண வடிவத்தில் வடிவமைத்து அதை எழுத்து கருவியாக பயன்படுத்தியிருக்கிறார்கள்.
3. **கம்பு (நாணல்) பேனா:** கிறிஸ்துவுக்கு முன் முதல் ஆயிரம் வருடங்களில் மெசபடோமியா பகுதிகளில் இந்த கம்பு பேனாவை பயன்படுத்தியிருக்கிறார்கள்.
4. **பறவையின் இறகு:** பறவையின் இறகில் மையைத் தொட்டு எழுத்து கருவியாக பயன்படுத்தினார்கள். விசேஷமாக இரண்டு மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் கிரேக்கர்கள் இதை பயன்படுத்தினார்கள். மை தயாரிப்பதற்கு கரி (Charcoal), கோந்து அல்லது பசை (gum) மற்றும் தண்ணீர் இவை மூன்றையும் கலவையாக சேர்த்து அதிலிருந்து மை தயாரிக்கப்பட்டது.

## E. வேதாகமத்தின் ஒழுங்கு

66 புத்தகங்களை கொண்ட வேதாகமம் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்று இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. 'ஏற்பாடு' என்கின்ற வார்த்தையை விட 'உடன்படிக்கை' என்கின்ற வார்த்தை மிகவும் ஏற்புடையதாக இருக்கிறது. கிரேக்க வார்த்தையாகிய 'டியாதெக்கே' என்கின்ற வார்த்தைக்கு 'உடன்படிக்கை' என்று பொருள்படும். பழைய உடன்படிக்கையானது கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் ஜனங்களோடு செய்ததாகும். புதிய உடன்படிக்கையானது கர்த்தர் இயேசு கிறிஸ்துவை கொண்டு மனுமக்களோடு செய்ததாகும். 2 கொரி 3 மற்றும் எபிரெயர் 8 ம் அதிகாரங்களில் பழைய உடன்படிக்கையை புது உடன்படிக்கையானது பெயர்ந்துபோகச்செய்திருக்கிறது என்பதை வாசிக்கிறோம்.

i. பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்கள் இருக்கிறது. இதை நான்கு பிரிவுகளாக நாம் பிரிக்கலாம்.
   1. நியாயப்பிரமாண புஸ்தகங்கள் அல்லது ஆகமங்கள் – 5 (ஆதியாகமம் முதல் உபாகமம் வரை)
   2. சரித்திரப் புத்தகங்கள் – 12 (யோசுவா முதல் எஸ்தர் வரை)
   3. கவிதை நடை புத்தகங்கள் – 5 (யோபு முதல் உன்னதப்பாட்டு)
   4. தீர்க்கதரிசன புத்தகங்கள் – 17 (ஏசாயா முதல் மல்கியா வரை)
      - பெரிய தீர்க்கதரிசிகள் – 5 (ஏசாயா முதல் தானியேல் வரை)
      - சிறிய தீர்க்கதரிசிகள் 12 (ஓசியா முதல் மல்கியா வரை)

இந்த ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் தான் தமிழ் வேதாகமம் இருக்கிறது. இது ஆங்கில வேதாகமத்தின் ஒழுங்கு வரிசையிலிருந்து எடுக்கப்பட்டது. ஆங்கில வேதாகமமானது லத்தின் வேதாகமமாகிய 'வல்கேட்' மொழிபெயர்ப்பின் ஒழுங்கு வரிசையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்த லத்தின் 'வல்கேட்' டின் ஒழுங்கு வரிசை 'செப்துவஜிந்த்'. ஒழுங்கு வரிசையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

<u>செப்துவஜிந்த் என்றால் என்ன?</u>

பழைய ஏற்பாடு முதன்முதலில் எபிரெய பாஷையில் தான் எழுதப்பட்டிருந்தது. கி.மு.285இல் கிரேக்க மொழிக்கு மொழியாக்கம் செய்தனர் இதற்க்கு செப்துவஜிந்த் என்று பெயர்.

ii. எபிரெயர்கள் பயன்படுத்தக்கூடிய பழைய ஏற்பாட்டில் மொத்தம் 24 புத்தகங்கள் மாத்திரமே உண்டு. இதை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.
   1. தோரா (நியாயப்பிரமாணம்) – 5 (ஆதியாகமம் முதல் உபாகமம் வரை)
   2. நிவீயீம் (தீர்க்கதரிசனங்கள்) – 8
      - முந்தைய தீர்க்கதரிசி – 4 (யோசுவா, நியாயதிபதிகள், 1,2 சாமுவேல் மற்றும் 1,2 இராஜாக்கள்)

- பிந்தைய தீர்க்கதரிசி –4 (ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், மற்றும் 12 சிறிய தீர்க்கதரிசிகள்)

3. கெத்துவீம் (எழுத்துக்கள் அல்லது சங்கீதங்கள்) –11
   - கவிதை நடை புத்தகங்கள் – 3 (சங்கீதம், நீதிமொழிகள், யோபு)
   - சுருள்கள் – 5 (உன்னதப்பாட்டு, ரூத், புலம்பல், பிரசங்கி, எஸ்தர்)
   - வரலாற்றுப் புத்தகங்கள் – 3 (தானியேல், எஸ்றா–நெகேமியா, 1,2,நாளாகமம்)

<u>இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் எபிரெயர்கள் பயன்படுத்திய பழைய ஏற்பாட்டை தான் பயன்படுத்தினார்கள் என்பதற்கான ஆதாரங்கள்.</u>

a. ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள் (மத் 23:35) – எபிரெய புஸ்தகத்தில் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தில் கொலை செய்யப்பட்ட மனிதன் ஆபேல்; கடைசிப் புத்தகமாகிய நாளாகமத்தில் கொலை செய்யப்பட்ட மனிதன் சகரியா.
b. மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார் (லூக்கா 24:44)